# முதலாம் தவணைப் பரீட்சை - 2018

## வரலாறு

306

தரம் : 06 சுட்டெண் : .............................. நேரம் : 2 மணித்தியாலம்

### பகுதி I

**மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1) மகா விகாரையைச் சேர்ந்த மகாநாம தேரரால் எழுதப்பட்ட இலங்கை பற்றிய வரலாற்று நூல் எது?
 1) தீப வம்சம் 2) மகாவம்சம் 3) தூபவம்சம் 4) போதிவம்சம்

2) மின்னேரியாக் குளத்தை கட்டிவித்த மன்னன் யார்?
 1) மகாசேனன் 2) வசபன் 3) பராக்கிமபாகு 4) தாதுசேனன்

3) முற்காலத்தில் "கீழைத்தேசங்களின் தானியக் களஞ்சியம்" என அழைக்கப்பட்ட நாடு எது?
 1) சீனா 2) யப்பான் 3) இந்தியா 4) இலங்கை

4) இலங்கை வரலாற்றினை அறிவதற்கு கி.பி 4 ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட மிகப் பழமையான இலக்கிய மூலாதாரம்
 1) சூள வம்சம் 2) போதிவம்சம் 3) தீபவம்சம் 4) மகாவம்சம்

5) வரலாறு பற்றிய அறிவினை பெற்றுக் கொள்ள உதவும் அனைத்தையும் பொதுவாக அழைக்கும் பெயர்.
 1) மூலாதாரங்கள் 2) கல்வெட்டுக்கள் 3) இலக்கியங்கள் 4) நாணயங்கள்

6) புத்தர் பெருமான் பரிநிர்வாணம் அடைந்த ஆண்டு
 1) கி.பி 247 2) கி.மு 544 3) கி.மு 274 4) கி.பி 267

7) புவியின் நடுப்பகுதி வெப்பநிலை எவ்வளவு?
 1) 100 செல்சியஸ் 2) 60 செல்சியஸ் 3) 100 செல்சியஸ் 4) 6000 செல்சியஸ்

8) புவியில் முதன் முதலில் தாவரங்கள் தோன்றிய யுகம் எது?
 1) பெலியோசொயிக் 2) பெரும் பனி யுகம் 3) சிலுரியன் யுகம் 4) விவசாய யுகம்

9) மனிதன் முதன் முதலில் நெருப்பைப் பயன்படுத்தியமைக்கான சான்று கண்டுபிடிக்கப்பட்ட நாடு எது?
 1) இந்தியா 2) இலங்கை 3) எகிப்து 4) இஸ்ரேல்

10) ஆதி மனிதனின் கண்டுபிடிப்புக்களில் மிகச் சிறந்த கண்டுபிடிப்பாக அமைவது
 1) வீடமைத்தல்
 2) நெருப்பை கண்டுபிடித்தலும் அதன் பயன்பாடும்
 3) வேட்டையாடுதல்
 4) கற்கலை பயன்படுத்தி கல்லாயுதம் செய்தமை

11) கற்களால் செய்யப்பட்ட ஆயுதங்களை பயன்படுத்தி மனித இனம் எது?
 1) ஹோமோ இரிரக்டஸ் 2) ஹோ மொறியண்ட தலன்சிஸ்
 3) ஹோமோ ஹெபிலஸ் 4) ஹோமோ சேபியஸ்

12) முதன் முதலில் நெற்செய்கை ஆரம்பமான நாடு எது?
 1) சோளம் 2) இந்தியா 3) ஆபிரிக்கா 4) சீனா



Scanned by CamScanner

13) மத்திய மெச்சிக்கோ பிரதேசத்தில் பயிரிடப்பட்ட தானியம்
1) சோளம் 2) கோதுமை 3) நெல் 4) சாமை

14) மனிதன் முதன்முதலில் சமய வழிபாடுகளில் ஈடுபட்ட காலம்
1) பழைய கற்காலம் 2) இடைக்கற்காலம்
3) புதிய கற்காலம் 4) பெரும் பனி யுகம்

15) மனிதன் ஒரே இடத்தில் நீண்ட காலம் வாழ்வதற்கு பழக்கப்படுத்திக் கொண்ட காலம்
1) பெரும்பனியுகம் 2) இடைக்கற்காலம்
3) புதிய கற்காலம் 4) பழைய கற்காலம்

16) எரிமலை வெடிக்கும் போது அதிலிருந்து வெளிவரும் திரவ வகை எவ்வாறு அழைக்கப்படும்
1) லாவா 2) உலோகம் 3) நிகாரிகா 4) இரும்பு

17) உலகில் முதன் முதலில் தோன்றிய மிகச் சிறிய உயிரினம்
1) மர அட்டை 2) பக்ரியா 3) பங்கசு 4) அல்கா

18) இலைகுழைகள் தடிகள் என்பவற்றைக் கொண்டு தற்காலிக குடிசைகளை அமைத்து வாழ்ந்த காலம்
1) புதிய கற்காலம் 2) பழையகற்காலம் 3) முன்கற்காலம் 4) இடைக்கற்காலம்

19) முஸ்லிம்கள் தமது சமய விழாக்களைக் கொண்டாடுவதற்காக காலங்களை கணிப்பிட பயன்படுத்திய ஆண்டு முறை எவ்வாறு அழைக்கப்படுகின்றன.
1) கிறிஸ்து வருடம் 2) ஹிஜ்ரி வருடம் 3) புத்தவருடம் 4) சாலிவாகன சகாப்தம்

20) இலங்கை சுதந்திரம் அடைந்த ஆண்டு யாது?
1) 1948 2)1848 3)1818 4) 1972

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாம் வினாவுக்கும் ஏனையவற்றுள் நான்கு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) அ)



1) இவ் உருவில் காணப்படும் உபகரணம் யாது?
2) இது செய்வதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள ஊடகம் எது?
3) இவ் உபகரணம் உடுவாக்கப்பட்ட ஆண்டு யாது?
4) எக்கால மனிதனால் உருவாக்கப்பட்டது.

ஆ சுருக்கமான விடை தருக.
1) மானிட பரிணாம வளர்ச்சிக் கேற்ப நாம் அனைவரும் எம் மானிட வர்க்கத்திற்கு உரியவர்கள் ?
2) மத்திய தரைக்கடல் பிரதேசத்தில் முதன்முதலில் பயிரிடப்பட்ட தானியம் எது?
3) நாம் வாழும் கோள் எது?
4) பொலநறுவையில் கல்விகாரையை கட்டிவித்த மன்னன் யார்?

(8 x 2 = 16 புள்ளிகள்)



Scanned by CamScanner

02) 1) வரலாறு என்றால் என்ன?

2) வரலாற்று மூலாதாரங்களின் இரண்டு வகையையும் தருக?

3) வரலாற்றை கற்பதலால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.

(3 + 4 +4 = 11 புள்ளிகள்)

03) 1) இலக்கிய மூலாதாரங்கள் மூன்று தருக?

2) தொல்பொருள் மூலாதாரங்கள் நான்கு தருக?

3) மூலாதாரங்கள் நான்கு தருக?

(3 + 4 +4 = 11 புள்ளிகள்)

04) 1) மனிதனின் கலாசார வளர்ச்சியின் மூன்று காலகட்டங்களையும் தருக?

2) பழைய கற்கால மனிதனின் வாழ்கை முறையின் இரண்டு அம்சங்களைத் தருக?

3) இடைக் கற்கால மனிதனின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் மூன்று தருக?

(3 + 4 +4 = 11 புள்ளிகள்)

05) 1) புதிய கற்காலத்தில் பயிரிடப்பட்ட தானியங்கள் மூன்று தருக?

2) புதிய கற்கால மனிதனின் வாழ்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டு தருக?

3) மனிதன் விவசாயம் செய்வதில் ஈடுபட்டமையால் அவனது வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றத்தை குறிப்பிடுக?

(3 + 4 +4 = 11 புள்ளிகள்)

06) 1) புவியின் தோற்றம்பற்றிய பொதுவான கருத்து யாது?

2) ஒபபீனியா என்ற உயிரினத்தின் அமைப்பின் நன்மை இரண்டு தருக?

3) மனிதனை ஏனைய விலங்குகளில் இருந்து முன்னிலைப்படுத்திக் காட்டும் செயல்கள் இரண்டு தருக?

(3 + 4 +4 = 11 புள்ளிகள்)



Scanned by CamScanner